# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 04.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5180/B/2018**

திரு.T.A.ராஜேந்திரன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்,
கடலூர் மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (04.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.T.A.ராஜேந்திரன் அவர்கள் ஆணையத்தின் அழைப்பாணை பெற்றுக் கொண்டு எவ்வித முகாந்திரமுமின்றி ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7ன்படி, மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர், திரு.R.S.ரவிச்சந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கடலூர் மாவட்டம், அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 06.03.2018 தேதியிட்ட மனுவில், அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு உட்பட்ட திருத்துறையூர் கிராம ஊராட்சியில் கடந்த 2011-12, 2012-13, 2013-14, 2014-15, மற்றும் 2015-16 ஆகிய ஆண்டுகளில் தமிழக அரசின் பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் விவரம் ஆண்டு வாரியாகவும், மேற்படி வீடுகளில் சோலார் மின்விளக்கு பொறுத்தப்பட்ட வீடுகள் எத்தனை? என்றும் அது சம்மந்தமாக பயனாளிகள் பெயர் பதிவு பட்டியல் தகவல் கேட்டு அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பொதுத் தகவல்

அலுவலருக்கு மனு செய்துள்ளார். அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் 27.03.2018 தேதியிட்ட கடிதத்தில், மனுதாரருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

3. அதில் திருப்தியடையாத மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறும் தெரிவித்து 19.04.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றிய அலுலவக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 16.07.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 30.08.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு நேரடியாக தகவல் வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதன் நகலை இணைப்புகளுடன் சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் மனுதாரார் ஆஜராகி தனக்கு வழங்கப்பட்ட தகவல் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்காதபட்சத்தில் ஆவணங்கள் அடிப்படையில் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக கருதி, வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5180/B/2018</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்,
கடலூர் மாவட்டம்

திரு.T.A.ராஜேந்திரன்,
எண்.205, மெயின்ரோடு.,
திருத்துறையூர் & அஞ்சல்,
பண்ருட்டி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 607 205

Copy to: File / Stock File
DS/PC 04.09.2019